# யானைகள் பாதுகாப்பாக - சுதந்திரமாக திகழச் செய்ய உறுதியேற்போம்!

## உலக யானைகள் நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!




**சென்னை, ஆக. 13 -**

**உலக யானைகள் நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள பதிவில், "இனிவரும் காலங்களிலும் யானைகள் பாதுகாப்பாகவும் - சுதந்திரமாகவும் திகழச் செய்ய உறுதியேற்போம்" என்று குறிப்பிட்டுள்ளார்.**

உலக யானைகள் நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

உலக யானைகள் நாளில், தமிழ்நாட்டின் இயற்கை மரபையும் வரலாற்றையும் செழுமைப்படுத்துவதில் யானைகளின் அளப்பரிய பங்கினைக் குறித்துச் சிந்தித்துப் பார்ப்போம்!

கோவையில், ஒன்றிய வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் அவர்கள் யானைகள் நாள் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு, மதுக்கரையில் நாம் அமைத்துள்ள செயற்கை நுண்ணறிவு எச்சரிக்கை அமைப்பைப் பார்வையிட உள்ளார். இந்த அமைப்பின் மூலம் 2,800 முறை யானைகள் இரயில் தண்டவாளத்தைப் பாதுகாப்பாகக் கடந்து சென்றுள்ளன. இதனால் 2024ஆம் ஆண்டு பிப்ரவரியில் இருந்து ஒரு யானை கூட இரயில் மோதி உயிரிழக்காமல் காப்பாற்றியுள்ளோம் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில், தெப்பக்காட்டில் யானைப் பாகர்களுக்கான கிராமத்தையும் நமது திராவிட மாடல் அரசின் சார்பில் தொடங்கி வைத்தேன். நமது யானைகளை அக்கறையோடு பராமரிக்கும் பாகர்களுக்கான சுற்றுச்சூழலோடு இயைந்த வீடுகளை அது கொண்டுள்ளது. யானைகளைப் பாதுகாப்பதோடு யானைப் பாகர்களின் நலனையும் இது மேம்படுத்துகிறது.

இனி வரும் காலங்களிலும் யானைகள் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் திகழச் செய்ய இந்நாளில் உறுதியேற்போம்!

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு- முன்னிலை! மேயர் பிரியா ராஜன் தலைமையில்

# திரு.வி.க. நகர் தொகுதி சார்பில் கலைஞர் நினைவு நாள் - முன்கள பணியாளர்களுக்கு நல உதவிகள்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. வழங்குகிறார்!

*சென்னை, ஆக.13-*

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க., திரு. வி.க.நகர் தொகுதி சார்பில், ஆகஸ்ட் 7 முத்தமிழறிஞர் கலைஞர் ஏழாம் ஆண்டு நினைவு நாள் போராளி ஓய்வதில்லை நினைவை போற்றி, முன்கள பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் - கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி அவர்கள் வழங்குகின்றார்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க., திரு. வி.க.நகர் தொகுதி சார்பில் ஆகஸ்ட் 7 முத்தமிழறிஞர் ஏழாம் ஆண்டு நினைவு நாள் போராளி ஓய்வதில்லை நினைவை போற்றி கலைஞர் - தூய்மை உலகம் படைப்பவர்!! சூரியச் சுடராய் ஒளிர்பவர்!! எனும் தலைப்பில் முன்கள பணியாளர்களுக்க நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (13.8.25 புதன்கிழமை) மாலை 4.00 மணியளவில் சென்னை, அகரம், பெரம்பூர், ஜமாலியா மேல்நிலைப் பள்ளியில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு, செ.தமிழ் வேந்தன், எம்.சாமிகண்ணு, பெரம்பூர் ஆர்.ராஜன், புனிதவதி எத்திராசன் எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, லயன். பி.உதயகுமார் முன்னிலை வகிக்கின்றனர்.

திரு.வி.க.நகர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள்: தில்லைகதிரவன், புல்லட் கி. ரமேஷ், பி.புவனவதி, கினார் ஆறுமுகம், திரு.வி.க.நகர் வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ், எஸ்.புஷ்பராஜ், ஜி. கிருஷ்ணகுமார், எம்.ஏ. டீக்கா, எம்.இசட்.அபோய். மாமன்ற உறுப்பினர்கள்: வழக்கறிஞர் மு.சரவணன், ரமணி லோகேஷ் , தமிழ் செல்வி சசிகுமார் இம்மாபெரும் இந்நலத்திட்ட விழாவில் முன்கள பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி அவர்கள் வழங்கி சிறப்பிக்கின்றார்.

மேலும், இந்நலத்திட்ட விழாவில் டாக்டர்.கலாநிதிவீராசாமி எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, தண்டலம் கிருஷ்ண மூர்த்தி. மாநில நிர்வாகிகள்: ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிசந்திரன், தமிழன் பிரசன்னா, சங்கரிநாராயணன், எஸ்.மணிமுடி, பி. கே.மூர்த்தி எம்.சி, கே.சந்துரு, மகேஷ்குமார், கே.எஸ். எம்.நாதன், எம்.விஜயகமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, பரிதிஇளம்சுருதி எம்.சி, வே.உமாகாந்த், புலவர் சாமி நாகப்பன், ஆர்.வரதன். மாவட்ட நிர்வாகிகள் கோ. ஏகப்பன், தேவஜவஹர், ஜி.எம்.தேவன், இசட் ஆசாத் எம்.சி. மண்டலகுழுதலைவர் கூ.பி.ஜெயின் எம்.சி, பா.ஸ்ரீராமுலு எம்.சி, டாக்டர் சாந்தகுமாரி எம்.சி, பகுதி கழக செயலாளர்கள்: சொ.வேலு எம்.சி, ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, வே.வாசு, டி.எஸ். பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர். பொதுக்குழு உறுப்பினர்கள்: பி.ஜே.துளசிங்கம், டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, எஸ். பன்னீர் செல்வம், கோ.மணி, எம்.இப்ராஹிம்கனி, அ.நிர்மலாதேவி, டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா, இரா.கலைச்செல்வி. மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள்: வானவில் விஜய், எஸ்.தனசேகர், ஜெ. பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், ஜி.ஜெ. பிரபு, ஆர்.டி.சங்கர்நானா.

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: நா.துலுக்கா ணம், எம்.பெரோஸ்கான், கா. ராஜ்முகமது, இரா.வீரமணி, எல்.பி.எப்.மோகன், துரைகண்ணன், சுதாதீனதயாயன் எம்.சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி, ஜி.தாமோதரன், பி.விஜயகுமார், எம்.விநாயகம், க. பா.பீரதீ ப்குமார், ஆர்.எ.சித்திக், ம.அசோக்கமார், கு. கிருஷ்ண மூர்த்தி, எல்.சம்பத்குமார், து.ஆயிரம். திரு. வி.க.நகர் தெற்கு பகுதி கழக நிர்வாகி கள்: அ.கோவிந்தன், பி.சுகுமார், த.கருணாநிதி, வனஜாசண்முகம், அ.கருணாநிதி. திரு.வி.க.நகர் தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: தே.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், எம். தமீம், வி.க.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், எஸ்.வெங்கடேசன், பா.பி.தாஸ்.

திரு.வி.க.நகர் வடக்கு தெற்கு பகுதி மாவட்ட பிரிதிநிதிகள்: வி.ஜெகன், கே.என். விஜய் (எ) ஸ்வீட் பாபு, டி. சீனிவாசன், மதுரைபிரகாசம், எம்.துரைசாமி, ஜெ. அண்ணா துரை, க.எழிலன், டி.ராஜி, பி.இளஞ்செழியன், பி.சத்தீஷ், ஆர்.ராஜராஜன், வ.நாமதேவன், எம்.விஜயகுமார், இரா.புருஷோத்தமன், எல்.சுப்பிரமணி, அ.விஜயகுமார், வெல்டிங் எஸ்.பாபு, வே.து.தாமரைச்செல்வன், நெல்லை.மா.முத்தையா, பா.பாபு மனோகரன், கி.நாகலிங்கம், அ.கதிரவன், எச். திவாகர், ஆர்.பிரகாஷ் கழக மூத்த முன்னோடிகள், கழக நிர்வாகிகள் ஆகியோர் சிறப்பிக்கி ன்றனர்.

இந்நலத்திட்ட விழாவில் மா. ருத்ரமூர்த்தி நன்றி கூறுகிறார்.

---

### சேலம் மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர்

# கருப்பூர் டி.பூபாலன் மறைவு!

## தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.13-

ஒருங்கிணைந்த சேலம் மாவட்டக் கழக தலைமைச் செயற்குழு உறுப்பினரும், மாவட்ட அறங்காவலர் நியமனக்குழுத் தலைவராகவும், தொ.மு.ச. மாவட்டத் தலைவராகவும், கருப்பூர் கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றிய கருப்பூர் டி.பூபாலன் (வயது 72) அவர்கள் நேற்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவலறிந்து தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், மறைந்த டி.பூபாலன் அவர்களின் குடும்பத்தாருக்கும், அன்னாரை இழந்து வாடும் உறவினர்கள், நண்பர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன் என தமது இரங்கல் செய்தியில் தலைவர், முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் கடலூர் மேற்கு மாவட்டம், திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி, கழுதூர் ஊராட்சியில், மாவட்டச் செயலாளர், அமைச்சர் சி.வி.கணேசன் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே நேரில் சென்று ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து கழுதூர், அரியநாச்சி, தொண்டாங்குறிச்சி ஆகிய கிராமங்களில் இத்திட்ட பயனாளிகளின் இல்லங்களுக்குச் சென்று ரேசன் பொருட்கள் விநியோகம் வழங்கப்பட்டது.

---

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் – சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# துறைமுகம் - திரு.வி.க. நகர் தொகுதிகளில் நாளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நல உதவிகள் வழங்குகிறார்!

சென்னை, ஆக. 13 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக திரு.வி.கநகர் தொகுதி சார்பில் சார்பில் ஆகஸ்ட் 7 முத்தமிழறிஞர் ஏழாம் ஆண்டு நினைவு நாள் போராளி ஓய்வதில்லை நினைவை போற்றி வழி தந்தது கலைஞர் இதயம் ஒளி தந்தது இளைய உதயம் எனும் தலைப்பில் நாளை (14-8-25 வியாழக்கிழமை) மாலை 4.00 மணியளவில் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் சென்னை பாரிமுனை இராஜா அண்ணாமலை மன்றத்தில் அன்னை தயாளு அம்மாள் தொண்டு நிறுவனத்தில் தையல் பயிற்சி பெற்ற 129 பெண்களுக்கு தையல் இயந்திரம் கணினி பயிற்சி பெற்ற 135 மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

சென்னை மண்ணடி பவளக்கார தெருவில் அன்னை தயாளு அம்மாள் தொண்டு நிறுவனத்தின் அழகு கலை பயிற்சி வகுப்பு கட்டிடம் திறப்பு சென்னை புளியந்தோப்பு டிக்காஸ்டர் தெருவில் கல்வி ஊக்கத்தொகை கழக குடும்ப மாணவர்களுக்கு மடிக்கணினி கழக மூத்த முன்னோடிகள் பொற்கிழி விளையாட்டு குழுக்களுக்கு உபகரணங்கள் வழங்குதல் திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தும், துவக்கப்பட வேண்டிய பணிகளை துவக்கி வைத்தும் சிறப்பிக்கிறார்.

இவ்விழாவில் மேயர் பிரியா ராஜன், நாடாளுமன்ற உறுப்பினர்கள தயாநிதி மாறன், டாக்டர்.கலாநிதிவீராசாமி, இரா.கிரிராஜன், எம்.எல்.ஏ.க்கள் ப. தாயகம்கவி, அ.வெற்றிஅழகன் ஜோசப்சாமுவேல் மற்றும் ப.ரங்கநாதன், மாநில நிர்வாகிகள் : கே.எஸ்.ரவிச் சந்திரன் சங்கரிநாராயணன், கவிஞர் நன்மாறன், தமிழன்பிரசன்னா, பி.கே. மூர்த்தி, எஸ்.மணிமுடி, ஆர்.வரதன், கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், பரிதிஇளம்சுருதி, என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, வே.உமாகாந்த், இந்திரஜித்,

மாவட்ட நிர்வாகிகள் : கோ.ஏகப்பன் தேவ ஜவகர் ஜி.எம்.தேவன் புனிதவதி எத்திராசன் இசட்.ஆசாத். பகுதி கழக நிர்வாகிகள்: எஸ் ராஜசேகர் எஸ் முரளி செ. தமிழ்வேந்தன் எம் சாமிக்கண்ணு கூ.பி.ஜெயின் வே.வாசு டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.டி.ஆர்.நாகராஜன் சொ. வேலு வி.சுதாகர் பொதுக்குழு உறுப்பினர்கள் : கோ.மணி எஸ் பன்னீர்செல்வம் சரிதா மகேஷ் குமார் த.வ. செம்மொழி சாவித்திரிவீரராகவன் பி.ஜே. துளசிங்கம் பி.உதயசங்கர் ரமேஷ்(எ) நீலகண்டன் எம்.இப்ராஹிம்கனி பாக்டர்.ஏ.பி.பூர்ணிமா

அ.நிர்மலாதேவி இரா.கலைச்செல்வி மாவட்ட அணிகளின் அமைப்பாளர் வானவில் விஜய் ப.ஜெகதீஷ் ஜெ.பாலமுருகன் க. வினோத் ஜி. ஜெ.பிரபு ஆர்.டி.சங்கர்நானா சுதாதீன தயாளன் ராஜேஸ்வரிஸ்ரீதர் பங்டர். சாந்தகுமாரி ஜி.வி.நாகவள்ளி என். துலுக்காணம் LPF.மோகன் பி.விஜயகுமார் எல்.சம்பத்குமார் க.பா. பிரதீப்குமார் க.கிருஷ்ணமூர்த்தி ஆ. பெரோஸ்கான் துரை கண்ணன் ஆர் எஸ் சித்திக் ம. அசோக்குமார் அ.விநாயகம் டி.தாமோதரன் கா.ராஜ்முகமது நு.ஆயிரம் இரா.வீரமணி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வடகிழக்கு செயலாளர் கழக முன்னோடிகள் செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

---

### உடன்பிறப்புகளின் முகவரியாய் இணையத்தில் பதிவாகி

# எத்தனையோ பேருக்கு உதவி, பயனுள்ள நிறைவாழ்வு வாழ்ந்தவர்!

## திருவைகுண்டம் கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளர் ஆ.சக்திவேல் மறைவுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஆக.13-**

**திருவைகுண்டம் கிழக்கு ஒன்றியக் கழக துணைச் செயலாளர் ஆ.சக்திவேல் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வலைதளத்தில் பதிவிட்டுள்ள கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "உடன்பிறப்புகளின் முகவரியாய் இணையத்தில் பதிவாகி, எத்தனையோ பேருக்கு உதவி, பயனுள்ள நிறைவாழ்வு வாழ்ந்தவர்!" என்று புகழாரம் சூட்டியுள்ளார்.**

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-




தன்னலங்கருதா உழைப்பால் தமது இறுதி மூச்சு வரையிலும், கழக உணர்வூட்டிய பெருந்தகையாளர் சக்திவேல் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைகிறேன்.

தி.மு.க.காரர் என்கிற சொல்லுக்கு பொருள்கூற வேண்டுமென்றால், சக்திவேல் அவர்களைக் காட்டினால் போதும் எனுமளவுக்கு, உடன்பிறப்புகளின் முகவரியாய் இணையத்தில் பதிவாகி, எத்தனையோ பேருக்கு உதவி, பயனுள்ள நிறைவாழ்வை வாழ்ந்து மறைந்துள்ளார் சக்திவேல் அவர்கள்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர், கழக உடன்பிறப்புகள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலும் ஆறுதலும்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# எஸ்பி. சற்குணபாண்டியன்

## ஆகஸ்ட் 13 (2016)

**'மாணவி சற்குணம்' என்ற பெயரில் கழக மேடைகளில் பேசி வந்த சற்குணபாண்டியன் சிறுமியாக இருந்தபோதே, கழகக் கொள்கைகளை இதயத்திலே பதிய வைத்துக் கொண்டவர். இவரது தந்தை பழம் பெரும் சுயமரியாதைக்காரரான பொன்னுசாமி அவர்களால் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டப்பட்டு, திராவிட இயக்கத்தின் தீபமாய், மாதர்குல திலகமாய் விளங்கியவர்.**



**"சொல்லின் செல்வி" என்று பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்ட இவர், மாணவரணி, மகளிர் அணி, வடசென்னை மாணவரணி, சென்னை மாவட்ட மகளிர் அணி, மாநில மகளிர் அணியின் செயலாளர் என்று படிப்படியாகப் பொறுப்பேற்று, கழக துணைப் பொதுச்செயலாளராக பொறுப்பு வகித்தார்.**

**1971இல் சென்னை மாநகராட்சிக்கு நியமன உறுப்பினராகவும் – 1989, 1996 ஆகிய இரண்டு முறை சென்னை இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, 1996ல் தலைவர் கலைஞர் அவர்கள் அமைச்சரவையில் சமூக நலத்துறை அமைச்சராக இருந்தார்.**

**மதுரை, திருச்சி, சென்னை ஆகிய இடங்களில் மண்டல மகளிர் மாநாடு நடத்தி ஒன்றிய, நகர மகளிர் அமைப்புகளை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும்.**

**17.9.1988 அன்று சென்னையில் நடைபெற்ற தேசிய முன்னணி ஊர்வல அணிவகுப்பில் பல்லாயிரக்கணக்கான மகளிரைப் பங்கேற்கச் செய்து ஊர்வலத்திற்கு சிறப்பு சேர்த்ததன் காரணமாக சென்னை கடற்கரையில் நடைபெற்ற தேசிய முன்னணித் துவக்க விழாப் பொதுக்கூட்டத்தில் கலைஞர் திருக்கரத்தால் தங்கச் சங்கிலி பரிசு பெற்றவர்.**

**திருச்செந்தூர் நீதிகேட்டு நெடும்பயணத்தில் தலைவர் கலைஞருடன் பயணம் மேற்கொண்டவர். கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் மகளிர் படை திரட்டி அதற்குத் தலைமை தாங்கி சிறை சென்றவர்.**

**இளம் பிராயத்திலிருந்து இவருக்கு இயக்கத்திலிருந்த ஆர்வத்தையும், தியாகத்தையும், பேச்சாற்றலையும் பாராட்டும் வகையில் கழகத்தின் சார்பில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் (1990) தலைமைக் கழகத்தின் சார்பில் கலைஞர் விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு வழங்கி சிறப்பித்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**